## தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

வீட்டுவசதி - கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறியுள்ளவர்கள் நிலுவையிலுள்ள தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 30.04.2004-ஆம் தேதிக்குள் முழுமையாக செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தை தள்ளுபடி செய்தும் இதன் தொடர்பாக முதன்மை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தை தள்ளுபடி செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(கூட்.1)துறை**

அரசாணை(நிலை)எண்:49. நாள்.20.02.2004.

படிக்கப்பட்டது:

1. கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர் கடித எண் 10465/2003/ஆ4, நாள்.15.10.2003.

ஆணை:

கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவி வரும் கடுமையான வறட்சியின் காரணமாக பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் அங்கத்தினர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய கடனுக்கான தவணை தொகையை உரிய காலத்தில் செலுத்தாததால், பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் அளவில் தவணை தவறிய கடன் நிலுவை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் இதனால் மிகவும் பாதிப்புக்க்கு உள்ளாகியுள்ளதுடன், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு தாங்கள் செலுத்த வேண்டிய தவணைத் தொகையை செலுத்தாததால்,, இணையத்திற்கு வரவேண்டிய தவணை தவறிய கடன் நிலுவை 30.09.2003-ல் உள்ளவாறு ரூ.667 கோடியாக (அதாவது தவணை தவறிய அசல் ரூ.146 கோடியும், தவணை தவறிய வட்டி ரூ. 395.00 கோடியும், தவணை தவறிய அபராத வட்டி ரூ.126.00 கோடியாகவும்) உயர்ந்துள்ளது என்று கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் தவணை தவறிய கடன் நிலுவை காரணமாக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் தொகையை காலத்தே திருப்பிச் செலுத்த இயலாத நிலையும்., நிதி நிறுவனங்களிடமிருந்து புதிய கடன் பெற்று பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு வழங்க இயலாத நிலையும் நிலவி வருகிறதென்றும், அவர் தெரிவித்துள்ளார்.

2. மேற்படி தவணை தவறிய அங்கத்தினர்கள் செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டிக்கு அபராத வட்டி கணக்கிடுவதன் மூலம் அங்கத்தினர்களின் சுமை கூடுதலாகின்ற நிலையை தவிர்த்திட, அபராத வட்டி முழுமையாக தள்ளுபடி செய்கின்ற சலுகையை வழங்குவதன்மூலம் அரசுக்கு எவ்வித நிதி இழப்பும் இல்லை என்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி) தெரிவித்துள்ளார். இவ்வகையில் தமிழகம் மூழுவதிலும் உள்ள 7,15,866 தவணை தவறிய உறுப்பினர்கள் பயன் பெறமுடியும் என்றும், இச்சலுகை மூலம் மட்டுமே தவணை தவறிய உறுப்பினர்கள் சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை செலுத்த ஊக்குவிக்க இயலும் எனவும், இத்தகைய அபராத வட்டி தள்ளுபடி சதவறிய உறுப்பினர்கள் பயன் பெறமுடியும் என்றும், இச்சலுகை மூலம் மட்டுமே தவணை தவறிய உறுப்பினர்கள் சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை செலுத்த ஊக்குவிக்க இயலும் எனவும், இத்தகைய அபராத வட்டி தள்ளுபடி சலுகையால்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மற்றும் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் நிதியுதவி கோரி அரசுக்கு எவ்வித முன்மொழிவும் அனுப்பாது எனவும் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளரின் பரிந்துரையை கவனமாக பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட ஆணையினை அரசு வெளியிடுகிறது:

1) பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறியுள்ளவர்கள் 1.10.2003-ல் நிலுவையில் உள்ள தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 30.04.2004-ஆம் தேதிக்குள் சங்கத்திற்கு முழுமையாக செலத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவை கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

2) பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் 1.10.2003 அன்றுள்ளவாறு நிலுவையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டியை 30.04.2004 தேதிக்குள் முழுமையாக செலுத்தும் பட்சத்தில் அச்சங்கங்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

3) மேலும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் இதுபோன்ற கடந்த கால வருவாய் இழப்பிற்கு இனி அரசு நிதியுதவி வழங்காது.

4. பதிவாளர் (வீட்டுவசதி) இது தொடர்பாக உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

லால் ராணா சைலோ,
அரசு செயலாளர்.

பெறுநர்

தனி அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், சென்னை.7.
அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மூலமாக.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை.9.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை.18.
மாநில கணக்காய்வுத் தலைவர்(பெயரில்), சென்னை.18.
மாநில கணக்காய்வுத் தலைவர்(தணிக்கை), சென்னை.35.
மாநில கணக்காய்வுத் தலைவர்(சி.ஏ.எஸ்), சென்னை.9.
அனைத்து கூட்டுறவு வீட்டுவசதி பிரிவுகள்
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை.9.
மாண்புமிகு அமைச்சர்(வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி)அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை.9.
அரசு செயலரின் நேர்முக உதவியாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை.9.
ஆளுநரின் தனிச் செயலர், சென்னை.
இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்